பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 14 புதன்கிழமை 28.05.2025 கதிர் 200

## இது ரகசியம் அல்ல!

பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினரான பேராசிரியர் ஐங்கரன் அமைச்சருக்கு முன்பாகவே தனது பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வந்தார் என்று ☞ 2

# முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள் 40 பேரைக் கைதுசெய்ய அரசு திட்டம்

## விமல் வீரவன்ஸ எச்சரிக்கை

கடந்த ஆளும்தரப்பின் முன்னாள் அமைச்சர்கள்நாடாளுமன்றஉறுப்பினர்கள் 40 பேரை கைதுசெய்து சிறையில் அடைப்பதற்குஆளும்தரப்பும்நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போது சிறையில் இருப்பவர்கள் சிலரும் அந்த பட்டியலில் இருக்கின்றனர் என தேசிய சுதந்தி முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தனியார்தொலைக்காட்சிஒன்றுக்கு ☞ 2



## உல்லாச இரவுப் பொழுதுகளை அதிகரிப்பதற்கு அரசு திட்டம்

இரவுப் பொழுதில் உல்லாச செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு பொருளாதாரத்தை அதிகரித்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் மற்றும் கொழும்பு நகரில் அனுபவிக்கக்கூடிய உல்லாச அனுபவங்களை அதிகரிப்பதற்கும் கட்டமைப்பு ரீதியான அணுகலுக்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, 'கடலோர இராப் பொழுது: உறங்காத கொழும்பு' என்ற தொனிப் பொருளின் கீழ் கொள்ளுப்பிட்டி தொடருந்து நிலையத்திலிருந்து தெஹிவல வரையான 7.4 கிலோமீற்றர் தூரம் கொண்ட கொழும்பு கடலோர வீதியை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதில் காலிமுகத்திடல் தொடக்கம் புனித தோமஸ் ஆரம்ப பாடசாலை வரைக்கும் 400 மீற்றர் தூரமான வலயத்தில் அதிக கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

## வெளிநாட்டு பயங்கரவாதிகளை எதிர்க்க புதிய ஒழுங்குமுறைகள் மிக விரைவில்

வெளிநாட்டு பயங்கரவாதிகளுக்கு எதிராக செயற்படுவதற்காகவினைத்திறனானசட்டரீதியான ஒழுங்குமுறையை அறிமுகம் செய்வதற்கு ஆளும்தரப்பும் தீர்மானித்துள்ளது.

பணத் தூய்மையாக்கல் தொடர்பான ஆசிய - பசுபிக் வலயத்தின் உறுப்பினர் என்ற ரீதியில் நிதிச் செயற்பாட்டு செயலணியால் தயாரிக்கப்பட்ட நிதித் தூய்மையாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்மற்றும்விரிவாக்கநிதியிடலுக்குஎதிராக சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களை பயனுள்ள வகையில் அமுல்படுத்துதல் மற்றும் வலுவுறுத்தலுக்கு இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

மேலும், குறித்த செயலணியின் உறுப்பு நாடுகளின்சட்டங்களுக்குஉற்றவகையில் நிதி செயற்பாட்டு செயலணியின் தராதரங்களுக்கு ஏற்புடையதான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு 6 ஆண்டுகளுக்கு ஒரு தடவை 'பரஸ்பர மதிப்பீடு' எனும் ☞ 2

## இலங்கை - சீனா இடையிலான வர்த்தக ஒப்பந்தத்திற்கு அனுமதி

இலங்கைமற்றும்சீனாவுக்குஇடையிலான மென்மையான இருதரப்பு வர்த்தக மேம்படுத்தலுக்கான செயற்பாட்டுக் குழுவை நிறுவுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொபமிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கைமற்றும்சீனாவுக்குஇடையிலான மென்மையான இருதரப்பு வர்த்தக மேம்படுத்தலுக்கான செயற்பாட்டுக் குழுவை நிறுவுதல் உகந்ததாக உள்ளது. அதன்மூலம் இருதரப்பு வர்த்தகத்தில் பயன்பாட்டுக்குஎடுக்கப்படாத சாத்தியங்களை திறந்து விடுதல், வர்த்தகம் சார்ந்த சவால்களுக்கு முகங்கொடுத்தல் ☞ 8

## தேர்தல் செலவு விவரம் வழங்காதோர் பெயர்கள் இன்று பொலிஸில் கையளிப்பு

2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகளை ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் செலவுகள் தொடர்பான விபரத்திரட்டை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் தொடர்பான விபரம் பொலிஸ்மா அதிபருக்கு இன்றைய தினம் சமர்ப்பிக்கப்படும். சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தமது உறுப்பினர் பட்டியல் விபரங்களை இதுவரையில் முழுமையாக சமர்ப்பிக்காத காரணத்தால் உறுப்பினர் நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிப்பதில் ஆணைக்குழு சிக்கல்நிலையைஎதிர்கொண்டுள்ளது.ஆகவே 30 ஆம் திகதிக்குள் பெண் பிரதிநிதித்துவம் மற்றும் உறுப்பினர் விபரங்களை சமர்ப்பிக்குமாறு வர்த்தமானி பிரசுரம் ஊடாக அறிவுறுத்தியுள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளுராட்சிமன்றத் தேர்தல் 2025.05.06ஆம் திகதியன்று நடத்தப்பட்டு, தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் செலவின விபரத்திரட்டை சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு அறிவுறுத்தியிருந்தோம். தேர்தல் முடிவுகள் வெளியாகி ☞ 8

## ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணில் ஒரு பணயக் கைதி

### சாடுகிறார் ரவி கருணாநாயக்க எம்.பி.



ஐக்கிய தேசிய கட்சியை ஒற்றுமைப்படுத்தி அனைவரையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கையை ரணில் விக்ரமசிங்க மேற்கொள்ளவேண்டும். என்றாலும் கட்சியில் இருக்கும் ஒரிரு நபர்களால் ரணில் விக்ரமசிங்க கட்சிக்குள் பணயக்கைதியாகி இருக்கிறார். ஒற்றுமையாக செயற்பட்டிருந்தால் கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை தனியாக அமைத்திருக்கலாம் என புதிய ஜனநாயக முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 8

## ஆஸி. நாட்டுத் தூதருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

ஆட்சிமாற்றத்தின்பின்னும்இந்தநாட்டில் திட்டமிட்ட வகையில் நடைபெற்றுவரும் இன, மத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியுள்ளதன் அவசியம் உணர்ந்து, ஆஸ்திரேலிய அரசின் தீர்மானங்களும், இராஜதந்திர அழுத்தங்களும் ஈழத்தமிழர் நலன்சார்ந்து வலுப்பெற வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர் ஆணையரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான ஆஸ்திரேலிய ☞ 2

## சிறுவர் முறைகேடுகளைக் குறைக்க விரைவில் பல்துறைப் பொறிமுறை

சிறுவர்கள் தொடர்பான முறைகேடுகளைக் குறைப்பதற்காகஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் கூடிய பல் துறைசார் பொறிமுறையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பும் அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் 3 இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டபுதிய அரசின் கொள்கைச் சட்டகத்தில் 'பாதுகாப்பான சிறுவர் உலகம் - ஆக்கபூர்வமான எதிர்கால சந்ததி' எனும் கொள்கை ரீதியான கடப்பாட்டின் பிரதான கோட்பாடாக அமைகின்ற பிள்ளைகளுக்குஇடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் அனைத்துவித பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறு விதமாக தலையிடுகின்ற பங்காளர்கள் சிலர் சிறுவர் விவகார அமைச்சு, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, மற்றும் இலங்கை பொலிஸ் முக்கிய பணிகளை ஆற்றி வருகின்றது.

பிள்ளைகளுக்கு இடம் பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் அனைத்துவித வன்முறைகள் ☞ 2

## சீனி மோசடி போன்று இன்று உப்பு மோசடி

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் இடம்பெற்ற வெள்ளை சீனி மோசடியைப் போன்று தற்போது உப்பு மோசடி இடம்பெறுகிறது. 24 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உப்புக்கு 40 ரூபா வரி அறவிடப்படுகிறது. அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு வற் வரியை நீக்குவதாகக் கூறிய ஆளும்தரப்புமே தற்போது இவ்வாறானதொரு மோசடியில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நேற்று இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை நேற்று அமைச்சருக்கு அனுப்பி வைப்பார் என்றும் தெரிவித்திருந்தேன். அதன்படி அவரது கடிதம் நேற்றே அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதற்கிடையில் நேற்றைய திகதியிட்டு பனை அபிவிருத்திச் சபைத் தலைவரைப பதவியிலிருந்து நீக்கும் கடிதத்தை அமைச்சர் அ-னுப்பி வைத்திருந்தார். சபையின் தலைவராக சகாதேவனை நியமிக்கும்போதே சர்ச்சைகள் இருந்தன. அவர் மீதும் பல குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அந்த எதிர்ப்புக்களை மீறியே வீம்புத்தனத்துடன் அவரைப் பதவியிலமர்த்தியது என்பிபி. இப்போது அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவருக்கு எதிரான சாட்டுதல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு வசதியாக அவரைப் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்குவதாக அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

என்னே ஒரு நிர்வாகத் தெளிவு. குற்றச்சாட்டுக்கள் உள்ள ஒருவரைத் தானே தலைவராக நியமித்துவிட்டு, அவர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக அவரைத் தற்காலிகமாகப் பதவி நீக்கும் 'அறிவுசார் நிர்வாகத் திறமை' என்பிபி தவிர வேறு யாரிடமும் இருப்பதற்கு வாய்ப்பில்லை. இத்தகைய என்பிபிக்குக் கொடிபிடித்தபடிதான், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரும் பேராசிரியர் ஜங்கரனின் நெருங்கிய நண்பருமான கபிலன் அரசியல் செய்யப்புறப்பட்டிருக்கிறார் என்பது அறிவுசால் உலகத்தால் பாராட்டப்படவேண்டியதுதானே!

அதுஒருபுறம் இருக்க, பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு என நியமிக்கப்பட்ட நிர்வாக முகாமையாளர் மற்றும் கணக்காய்வாளர் ஆகியோர், இவர்களில் ஒருவர் தமிழர் மற்றவர் சிங்களவர் கொழும்பில் உள்ள அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாப்புப் படி அவர்களும் தலைமை அலுவலகமும் யாழ்ப்பாணத்திலேயே இருக்கவேண்டும் என்று வலியுறுத்திய காரணத்தாலேயே பேராசிரியர் ஜங்கரனை பெருந்தோட்டத்துறை அமைச்சரும் அமைச்சு அதிகாரிகளும் தூக்கி எறிந்து நடந்தார்கள் என்பதை நேற்றுத் தெரிவித்திருந்தேன்.

ஆனால், இந்த விவகாரத்தின் பின்னால் அதுமட்டுமல்ல, வேறு பல விடயங்களும் உள்ளன என்று உள்வீட்டுத் தகவல்களை நன்கு அறிந்த தரப்புக்கள் தகவல் தந்தன. பனை அபிவிருத்திச் சபையின் கீழ் வரும் திக்கம் வடிசாலை கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டது. அந்த ஒப்பந்தப்படி அந்த நிறுவனம் திக்கம் வடிசாலையை இயக்கவேண்டும். ஆனால் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இன்றுவரையும் திக்கத்தை இயக்குவதற்கான எந்தவொரு அசைவையும் அந்த நிறுவனம் மேற்கொள்ளவில்லை. இருந்தாலும் அந்த நிறுவனத்தின் சார்பில் பனஞ்சாராயம் வெளியிடப்படுகின்றது. இது எப்படி என்பது இன்னும் தெளிவில்லை. திக்கத்தில் ஏற்கனவே இருந்த மதுசாரத்தைக் கொண்டு இந்தச் சாராயம் உற்பத்தி செய்யப்படுகின்றதா என்பது கண்டறியப்படவேண்டும். திக்கத்தை முன்னைய ஆட்சியாளர்களும் சூறையாடியது போக, ஒப்பந்தம் செய்த தனியார் நிறுவனமும் இயக்காதிருப்பதால் அதனை பனை அபிவிருத்திச் சபை மீண்டும் பொறுப்பெடுத்து இயக்கவேண்டும் என்பது பேராசிரியர் ஜங்கரனின் கருத்தாக இருந்து வந்திருக்கிறது. அவர் இதனை அமைச்சரிடமும் பலதடவைகள் வலியுறுத்தியிருக்கிறார். அதற்கு சபைத் தலைவரும் ஆதரவு வழங்கி வந்திருக்கிறார்.

ஒப்பந்தப்படி தனியார் நிறுவனத்தினர் நடந்துகொள்ளாத காரணத்தால் அந்த ஒப்பந்தத்தை முறித்துவிட்டு திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சபையே பொறுப்பெடுக்கவேண்டும் என்பதுதான் இவர்களின் கருத்தாக அழுத்தமாக இருந்திருக்கிறது. ஆனால், அமைச்சு மட்ட அதிகாரிகளுக்கு இதில் உடன்பாடில்லை. அந்தத் தனியார் நிறுவனத்திடமிருந்து வடிசாலையைத் திரும்பப் பெறுவதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. அதற்குச் சோடிக்கப்பட்ட காரணங்களை அவர்கள் அமைச்சரிடம் தெரிவித்து அவரை நம்ப வைத்திருக்கிறார்கள். சொந்தமாகச் சிந்திக்கத் தெரியாததாலோ என்னவோ அமைச்சரும் அதிகாரிகளின் சொற்படி கேட்டு ஆடியதன் விளைவே இப்போது சபைக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த ஓர் ஆளும்தரப்பு, சிறீலங்கன் எயார் லைன்ஸ் போன்ற பெருமளவில் நட்டமடையும் நிறுவனங்களையே தனியார் மயப்படுத்தமாட்டேன் என்று அடம்பிடிக்கும் ஆளும்தரப்பு தமிழர்களின் சொத்து என்று வருகின்றபோது தெற்கைச் சேர்ந்த தனியார் நிறுவன முதலாளிகளுக்கு ஆதரவாக நின்று பொதுச் சொத்துக்களை தனியார் மயப்படுத்துவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றது. நல்ல வேடிக்கைதான் போங்கள்!.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முன்னாள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிறுவனங்களின் அதிகாரிகளை கைதுசெய்து சிறைக்கு அனுப்பும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது இன்றைய ஆளும்தரப்பு. நல்லாட்சி ஆளும்தரப்பு காலத்திலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போதும் அந்த ஆளும்தரப்பில் இந்த நடவடிக்கையை அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அவருடன் இருந்தவர்களே மேற்கொண்டுவந்தனர். உர கப்பல் ஒன்றுக்கு பணம் செலுத்தியதாக தெரிவித்து அரச அதிகாரிகள் சிலர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். நல்லாட்சி ஆட்சியில் முன்னாள் அரசுத் தலைவர் செயலாளர் லலித் வீரதுங்கவை கைதுசெய்து சிறையில் அடைத்தார்கள். இவ்வாறு செயற்பட்டால் அரச இயந்திரம் செயலிழந்துவிடும். அரச அதிகாரிகள் எந்த தீர்மானங்களையும் எடுக்காமல்போகும் நிலை ஏற்படும். தீர்மானம் எடுத்தால் சிறைக்கு செல்ல நேரிடும் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்படும்.

இலஞ்சஊழல்ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு 29ஆம் திகதி வருமாறு எனக்கும் அழைப்பு வந்திருக்கிறது. வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில், வீடமைப்பு அதிகாரசபை அதிகாரிகள், மாலிகாவத்தையில் இடிந்துவிழும் நிலையில் இருந்த கடைத்தொகுதி ஒன்றை அதிகாரசபையின் நிதி மூலம் அதனை செப்பனிட்டு, அதனை வாடகைக்கு வழங்க கேள்விகோரல் விடுத்திருக்கின்றனர். யாரும் வராத நிலையில் அதில் விலை குறைப்பு மேற்கொண்டு மீண்டும் கேள்விகோரலுக்கு விட்டபோது ஒருவர் அதனை வாங்கிஇருக்கிறார். இதற்கான அனுமதி அப்போது இருந்த குழுக்களின் அனுமதியை பெற்றுக்கொண்டு, இறுதியாக பணிப்பாளர் சபை அதற்கு அனுமதி வழங்கி இருக்கிறது. இதற்கும் அமைச்சருக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் வீடமைப்பு அதிகாரசபையின் நடவடிக்கையால் ஆளும்தரப்பு நட்டமடைந்துள்ளதாகவும். அப்போது இந்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இதுதொடர்பாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ள வருமாறு அழைப்பு வந்திருக்கிறது.

எப்படியாவது எம்மை சிக்க வைக்க வேண்டும் என்ற அடிப்படையில் பழைய விடயங்களை ஆளும்தரப்பும் கிழறிக்கொண்டிருக்கிறது. இவ்வாறு கைதுசெய்வதற்கு 40 பேரின் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் தற்போது செயற்பாட்டு அரசியலில் இருப்பவர்களும் இல்லாதவர்களும் அடங்குகின்றனர். அந்த பட்டியலில் தற்போது கைதுசெய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் சிலரும் அடங்குகின்றனர். அதேபோன்று முன்னாள் அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர, ரமேஷ் பத்திரண ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்குகின்றன.

நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் நாயகம் அடிக்கடி அரசுத் தலைவர் செயலகத்துக்கு சென்று அதுதொடர்பில் ஆலாசேனை கேட்டுவருகிறார். அரசுத் தலைவர் செயலகத்திலே இந்த பெயர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஆளும்தரப்புத்துக்கு வாக்குகள் குறைவடைய காரணம் திருடர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தவறியமையாகும் என்றே இவர்கள் நினைக்கின்றனர். அதனடிப்படையிலே தற்போது 40 பேரை கைதுசெய்து சிறையில் அடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

## வெளிநாட்டு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயரில் அழைக்கப்படும் பரஸ்பர சமமான மீளாய்வு செயன்முறைக்கு இலங்கை உட்படுகிறது.

இலங்கை தொடர்பான 3 ஆவது மதிப்பீட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய அயலுறவுத்துறை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சினால் வெளிநாட்டு பயங்கரவாத போராளிகள் தொடர்பான ஜக்கிய நாடுகள் பாதுகாப்புசபையின் முன்மொழிவை 2178 (2014) விரைவாக பிரகடனப்படுத்துதல் மற்றும் உள்நாட்டு சட்டத்தை வகுப்பதன் மூலம் மேற்குறித்த முன்மொழிவின் ஏற்பாடுளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

அதற்கமைய, 2026 மார்ச் மாதத்துக்கு முன்னர் வெளிநாட்டு பயங்கரவாத போராளிகள் தொடர்பான சட்டத்தை தயாரிக்க வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உள்ளது. எனவே ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை முன்மொழிவின் 2178 (2014) அடிப்படையில் வெளிநாட்டு பயங்கரவாத போராளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் அரசுத் தலைவர் மறறும் அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

## சீனி மோசடி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற முறைகேடுகளை மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்த தாவது:

உப்பு தட்டுப்பாடு ஏற்படவுள்ளமை தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னரே ஆளும்தரப்பும் அறிந்திருந்தது. அது தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை என ஆளும்தரப்பால் கூறமுடியாது. மழை காரணமாக உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுவது பொய்யாகும். இதற்கு முன்னர் இருந்த ஆட்சியில் மழை பெய்யவில்லையா? மழை பெய்வதற்கும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு வேண்டுமா?

தமது இயலாமையை மறைப்பதற்கு இயற்கையின் மீதும் பழி சுமத்துகின்றனர். சுனாமி ஆழிப் பேரலையால் பாரதூரமான அழிவுகள் ஏற்பட்டபோதும்கூட வெளிநாடுகளிலிருந்துஉப்புஇறக்குமதிசெய்யப்படவில்லை. அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தால் உப்பு இறக்குமதி செய்து அவற்றை சந்தைகளில் விநியோகிப்பதற்காக தனியார் நிறுவனத்திடம் வழங்கியது.

அந்த நிறுவனங்களால் ஒரு கிலோ உப்பு 350 - 400 ரூபாவுக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் உப்பு ஒரு கிலோ 130 ரூபாவாகக் காணப்பட்டது. இந்தியாவிலிருந்து ஒரு மெட்ரிக் தொன் உப்பு 80 டொலருக்கு இறக்குமதி செய்யப்பட்டது. அவ்வாறெனில் ஒரு கிலோ உப்பு இலங்கை விலைப்படி 24 ரூபாவாகும். ஆனால் ஒரு கிலோ உப்புக்கு 40 ரூபா இறக்குமதி வரி அறவிடப்படுகிறது.

இறக்குமதி செலவைவிட இருமடங்குக்கும் அதிகமாக வரி அறவிடப்படுகிறது. போக்குவரத்து உள்ளிட்ட செலவுகளை உள்ளடங்கினாலும் ஒரு கிலோ உப்பினை ஆகக் குறைந்தது 100 ரூபாவுக்கு வழங்க முடியும். ஆனால் சந்தைகளில் 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆளும்தரப்பும் இறக்குமதி செய்து தனியார் கம்பனிகளுக்கு வழங்குகிறது. தனியார் கம்பனிகள் அவற்றை 350 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றன.

இது கோட்டாபய ராஜபக்ச ஆளும்தரப்பில் இடம்பெற்ற வெள்ளைச் சீனி மோசடியைப் போன்றதாகும். 400 கிராம் உப்பு 170 ரூபாவாகும். மக்களுக்கு இது தெரிவதில்லை. அவர்கள் விலையை மாத்திரமே பார்க்கின்றனர். அளவைப் பார்ப்பதில்லை. ஒரு கிலோ கிராம் உப்பை 130 ரூபாவுக்கு கொள்வனவு செய்த மக்கள் இன்று 400 கிராம் உப்பை 170 ரூபாவுக்கு கொள்வனவு செய்கின்றனர்.

கடந்த ஆளும்தரப்புத்தில் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டு அதன் விலை 80 ரூபாவாக அதிகரித்தபோது, ஆளும்தரப்பும் முட்டையை இறக்குமதி செய்து 35 ரூபாவுக்கு வழங்கியது. அவ்வாறெனில் இந்த ஆளும்தரப்புமும் உப்பினை குறைந்த விலையில் அல்லவா வழங்கவேண்டும்? அத்தியாவசிய பொருட்களுக்கு வற் வரியை நீக்குவதாகக் கூறிய ஆளும்தரப்பும் இன்று இறக்குமதி செலவை விட அதிக வரியை அறவிடுகிறது என்றார்.

## சிறுவர் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக தேசிய பாதுகாப்பு அதிகாரசபையால் 24 மணிநேர முறைப்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகளை வழங்கியுள்ளது. ஆயினும், முறையான வகையில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களும் அதிகளவில் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் துரிதமாக தலையிட்டு செயற்படுவதற்கு இயலுமாகும் வகையில் கீழ்க்காணும் படிமுறைகளை மேற்கொள்வதற்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய தேசியமட்டக்குழுவொன்றை நியமிப்பதற்கும், சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற உடலியல் ரீதியான தண்டனைகளை இல்லாதொழிப்பதற்கு இயலுமாகும் வகையில் தண்டனைச்சட்டக்கோவை மற்றும் குற்றவியல் வழக்குக் கோவையை துரிதமாக திருத்தம் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் பற்றி அறிக்கையிடும் போது பாதிக்கப்பட்ட சிறார்கள் மீண்டும் மீண்டும் பாதிப்புக்குள்ளாவதைத் தடுப்பதற்கு இயலுமாகும் வகையில் பொருத்தமான ஏற்பாடுகளை உட்சேர்த்து, தற்போது வரைவாக்கம் செய்யப்படுகின்ற ஊடக ஒழுக்கநெறிக் கோவையை துரிதமாக வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தனித்துவ அடையாளங்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் வெகுசன ஊடக நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடக செய்தித் தொடர்பாடலாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக குற்றத்தால் பலியானவர்கள் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உடனடி தலையீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஆஸி.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ஆணையரிடம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், ஆளும்தரப்பு மாற்றம் மற்றும் அரசுத் தலைவர் தேர்தல் முதல் உள்ளாட்சித் தேர்தல் வரையிலான தற்போதைய தமிழ் அரசியல் குறித்து உயர்ஆணையரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு தொடர்பான நிலப் பிரச்சினைகள், வடக்கு மாகாணத்தில் சுமார் 6000 ஏக்கர் கடலோர நிலங்களை அரசு நிலங்களாக அறிவிக்கும் சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவிப்பு குறித்தும், தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வாக வடக்கு மற்றும் கிழக்கில் நிலங்கள், காவல்துறை மற்றும் நிதி ஆகியவற்றில் மீளமுடியாத அதிகாரங்களைக் கொண்ட சமஸ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு நிறுவப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வலியுறுத்தினார்.

இந்த கூட்டத்தில் ஆஸ்திரேலிய உயர் ஆணையர் போல் ஸ்டீபன்ஸ், அவரது துணைவியார் கிரிட்டினா ஸ்டீபன்ஸ், திட்ட ஒத்துழைப்புக்கான முதல் செயலாளர், திருமதி ஜோ கிட், அரசியல் துறைக்கான இரண்டாவது செயலாளர் மேத்யூ லார்ட் மற்றும் மூத்த ஆராய்ச்சி அதிகாரி சில்வெஸ்டர் வொர்திங்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சாவகச்சேரி – கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவேண்டும்

## குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதி லலிதாராணி கோரிக்கை

(சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் நிரந்தரமாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ் மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதியும்-சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினருமான திருமதி லலிதாராணி கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊராட்சி முற்றக் குறை கேள் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

கோவிற்குடியிருப்பு கிராமம் அதிக சனத்தொகையைக் கொண்ட பரந்த கிராமமாக காணப்படுகின்ற போதிலும் அங்கு பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான நிரந்தர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் இல்லை.

கிராமத்தில் சனசமூக நிலையங்கள், வீடு என நான்கு இடங்களில் மேற்படி சேவை தற்காலிகமாக இடம்பெறுகின்றது.

மேற்படி இடங்களில் முறையான மலசலகூட வசதி உள்ளிட்ட வசதிகள் இன்மையால் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தற்காலிக ஆரம்ப சுகாதார நிலையங்கள் உரிய வசதிவாய்ப்புக்கள் இன்றிக் காணப்படுவதால் அங்கு எடை மட்டுமே அளவிடப்படுகின்றது.

மேலதிக சேவைகளுக்காக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு செல்ல வேண்டிய தேவை உள்ளது. அங்கும் போதிய இடவசதி இல்லை.

எனவே கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் உரிய வளங்களுடன் நிரந்தரமாக ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் அமைக்கும் போது சிரமங்களைத் தவிர்க்க முடியும் என மேலும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

மேற்படி கோரிக்கை தொடர்பில் கூட்டத்திற்கு தலைமைவகித்த அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கருத்துத் தெரிவிக்கையில்; -

கோவிற்குடியிருப்பு கிராமம் பெரிய கிராமம் என்பதால் கிராமத்தில் ஓர் இடத்தில் நிரந்தர கட்டடம் அமைத்து சேவை வழங்கினால் அது பொதுமக்களுக்கு சிரமமாக இருக்கும்.

தற்போது சேவை முன்னெடுக்கப்படுகின்ற நான்கு தற்காலிக இடங்களிலும் உள்ள குறைபாடுகளை நீக்க முதற்கட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்து கிராமத்திலேயே ஆரம்ப சுகாதார நிலையத்தின் சேவைகளை திறம்பட முன்னெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என மேலும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

மேற்படி கலந்துரையாடலில் பிரதேசசெயலர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்

## மாவட்டச் செயலர் பிரதீபன் சுட்டிக்காட்டு



(சுபேசன்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருவது நல்லதொரு எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் செயற்பாடாக காணப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கடந்தவியாழக்கிழமையாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற ஊராட்சி முற்ற நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; –

வடக்கு மாகாணத்தில் ஊராட்சி முற்றச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையோடு மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராம மற்றும் பிரதேச மட்டங்களில் தீர்க்கப்பட முடியாத அல்லது தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்கும் களமாக இந்த மாவட்ட ஊராட்சி முற்றம் அமைகின்றது.

கிறிசலிஸ் அமைப்பினர் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் அரசியலில் பெண்களின் வகிபாகம் ஆகியன தொடர்பில் தமது காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

கிறிசலிஸ் அமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பெண் பிரதிநிதிகள் பலர் இம்முறை உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிட்டு சபைகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

அவர்கள் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்கள். மக்களுக்காக குறிப்பாக பெண்களின் பிரச்சினைகளுக்காக அவர்கள் குரல் கொடுப்பார்கள்.

ஊராட்சி முற்றச் செயற்பாடுகளை மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தோடு மட்டும் செயற்படுத்தாது கிராம மற்றும் பிரதேச மட்டங்களுக்கும் அதனை கொண்டு செல்ல வேண்டும்.

அப்போது கிராம மட்டப் பிரச்சனைகளை கிராமத்திலேயே தீர்க்கக்கூடிய நிலை ஏற்படும்.

அதேநேரம் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வி மற்றும் அறிவு ஆகியன அந்த பெண் சார்ந்த சமூகத்திற்கு பயனுள்ளதாக அமையும்.ஒரு பெண் வளர்ச்சியடையும் பட்சத்தில் அவர் சார்ந்தவர்கள் முன்னேறுவார்கள்.அது ஒரு வினைத்திறனான சமூகத்திற்கு பயனுள்ளதாக அமையும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் சுயதொழிலில் முன்னேறி வருகின்றனர். தற்போது பெண்கள் அனைத்து துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துபவர்களாக மிளிர்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15பிரதேச செயலாளர்களில் 8பேர் பெண்களாக உள்ளனர். பல்கலைக்கழகங்களை எடுத்துக் கொண்டாலும் சகல பீடங்களில் பெண்கள் அதிகளவில் காணப்படுகின்றனர். இது சமூக வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு சிறந்த சான்றாகக் காணப்படுகின்றது.

இருப்பினும் சில குறைபாடுகள் மற்றும் இடர்பாடுகள் இருக்கவே செய்கின்றன. பல பிரச்சனைகள் தீர்க்கப்படாமலும்–அதேநேரம் தட்டிக்கழிக்கப்படும் சூழ்நிலைகளும் உள்ளன.

அவ்வாறான பிரச்சனைகளை இயன்றவரை தீர்த்து ஆரோக்காயமான சமுதாயத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மாமாங்கத்தில் யாழ்.கதிர்காம பாதயாத்திரீகர்கள்

(சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட யாழ் கதிர்காமம் பாதயாத்திரீகர்கள் நேற்று 27 ஆவது நாளில் மட்டு.மாவட்டத்திலுள்ள செங்கலடியை அடைந்தனர்.

.யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த மே மாதம் முதலாம் திகதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 27 தினங்களில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு திருகோணமலை ஆகிய நான்கு மாவட்டங்களைக் கடந்து தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளனர்.

இன்று(புதன்கிழமை) அவர்கள் வரலாற்று பிரசித்திபெற்ற மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை செற்றடைவர்.

நாளை (வியாழக்கிழமை) காலை மாமாங்கத்தில் காரைதீவு - மட்டக்களப்பு வாழ் ஒன்றியத்தினரின் காலை ஆகாரம் வழங்கப்படும்.

பின்னர் குழுவினர் நேரடியாக இராமகிருஷ்ணமிஷன்கல்லடி ஆச்சிரமபொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீயின் அழைப்பில் அங்கு செல்கிறார்கள். அங்கு இராமகிருஷ்ண ஆலயத்தில் விசேட பஜனை ஆராதனையுடன் மதிய அன்னதானமும் இடம் பெறும்.

அங்கு மணிமண்டப சிவபுரியில் பிற்பகலில் மருத்துவ முகாம் நடாத்த வழமைபோல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என சுவாமி நீலமாதவானந்தா ஜீ தெரிவித்தார்.

மழை வெயிலுக்கு மத்தியில் சுமார் 78 அடியார்கள் இதில் பங்கேற்றுள்ளனர். அவர்களில் சிலருக்கு காய்ச்சல் தடிமன் ஏற்பட்டுள்ளது. சிலருக்கு வெயில் கொடூரம் காரணமாக கால்கள் கொப்பளித்துமுள்ளது.

இவர்கள் எதிர்வரும் 03 ஆம் திகதி காரைதீவை சென்றடைவார்கள்.

எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடைவர்.





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கல்விச்சாலைகள் பெண் பிள்ளைகளுக்கு அழுத்தம் தரும் இடங்களாகிவிட்டனவா?

இலங்கையின் கல்வி நிறுவனங்கள், குறிப்பாக உயர் கல்விக்கான தளங்களில் இடம்பெறும் சம்பவங்கள், சமுதாய சிந்தனையை அதிக ஆழத்தில் உலுக்கியவையாகத் திகழ்கின்றன. சமீபத்தில் கல்வியியல் கல்லூரி விடுதியில் தங்கி கல்வி கற்றுவந்த பெண் பிள்ளை ஒருவர் தற்கொலை செய்து கொண்டதான செய்தி நாடெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இது தனிமனிதர் செய்த முடிவாக மட்டும் பார்க்க முடியாது. ஏனெனில், இதற்கு முன்னதாகவே பாடசாலை மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவமும் சமூகத்தில் பதட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் மீண்டும் இப்படி ஒரு சம்பவம் நிகழ்வது, சமுதாயத்தில் நிலவும் பல்வேறு அமைப்புசார் அழுத்தங்களை வெளிப்படுத்துகிறது.

கல்வி என்பது ஒரு பெண் பிள்ளைக்கு வாழ்க்கையை வளப்படுத்தும் வழிமுறையாக இருக்க வேண்டும். ஆனால், தற்போது அது மன அழுத்தங்களால் நிரம்பிய இடமாக மாறிவிட்டதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. மாணவிகள் மீது விதிக்கப்படும் தனிநபர் எதிர்பார்ப்புகள், குடும்ப வரம்புகள், விடுதி ஒழுங்குகள், கல்லூரிப் போட்டிகள், ஆசிரியர் தன்மைகள் ஆகியவை அனைவருக்கும் சமமாக செயல்படுகின்றனவா என்ற ஐயம் தற்போது எழுகிறது.

மாணவர்கள் – குறிப்பாக பெண்கள் – விடுதிகளில் தங்கி கற்கும் போது அவர்கள் எதிர்கொள்ளும் மனநிலை, பாதுகாப்பு, வழிகாட்டல் ஆகியவை உறுதியாக இருக்க வேண்டியது கல்வி நிறுவனங்களின் பொறுப்பாகும். ஆனால், பல இடங்களில் இது சீரழிந்து இருப்பதுதான் நிலைமையை மோசமாக்குகிறது.

அரசு, கல்வி அமைச்சு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு இணைந்து இவ்வகை தற்கொலை சம்பவங்களை ஆழமாக விசாரித்து, அதற்கான அடிப்படை காரணங்களை அறிவது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் இது போன்ற சூழ்நிலைகள் உருவாகாமல் தடுக்கும் திட்டங்களை தீட்ட வேண்டிய கட்டாயத்திற்கு இந்நிகழ்வுகள் தூண்டுகின்றன.

ஒரு பெண்பிள்ளை தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகிறாள் என்றாலே அது சமுதாயம் தோல்வியடைந்துவிட்டதைக் குறிக்கிறது. இது போன்ற வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கான முதல் படி, ஒவ்வொரு பெண் மாணவியையும் பாதுகாப்பு, மதிப்பு, மனநலம் ஆகிய மூன்று அடித்தளங்களில் உறுதியான முறையில் வளர்க்கும் சூழ்நிலையை உருவாக்குவதே ஆகும்.

## தலவாக்கலை பிரதேச செயலகத்திற்கு பௌதீக வளம் தரக்கோரி ஆர்ப்பாட்டம்




(கிஷாந்தன்)

தலவாக்கலை பிரதேச செயலகத்திற்கு பௌதீக வளங்களை வழங்குமாறு கோரி, அந்த அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குழு ஒன்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலவாக்கலையில் உள்ள தலவாக்கலை லிந்துலை நகர சபைக்கு சொந்தமான இரண்டு மாடி கட்டடத்தில் 2020 ஆம் ஆண்டு பிரதேச செயலகம் நிறுவப்பட்டது. மேற்படி பிரதேச செயலகத்தின் கீழ், தலவாக்கலை லிந்துல நகர சபைப் பகுதி, திம்புள்ள கிராம சேவகர் பகுதி மற்றும் கொட்டகலை, அக்கரபத்தனை ஆகிய பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் குடியிருப்பாளர்களுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் போராட்டத்தை தொழிற்சங்க கூட்டுக் குழு ஏற்பாடு செய்திருந்தது. அதன் உறுப்பினர் தம்மிக்க முனுசிங்க, இந்தப் பிரதேச செயலகத்தில் சுமார் 150 அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பணிபுரிவதாகவும், பிரதேச செயலகத்தில் உள்ள இடம் அதற்குப் போதுமானதாக இல்லை என்றும் கூறினார்.

அதேபோல், பிரதேச செயலகத்தில் பௌதீக வளங்கள் இல்லாததால், அந்த அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு திறமையான சேவையை வழங்க முடியவில்லை.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் பொறுப்பான அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும், இதுவரை எந்த தீர்வும் எட்டப்படவில்லை.

எனவே, இதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த பிரதேச செயலகத்திற்கு அருகில் இருந்து தொடங்கிய போராட்டம் தலவாக்கலை நகரம் வரை சென்றது. இதனால் ஹட்டன்-நுவரெலியா பிரதான வீதியை மறித்ததன் காரணமாக தலவாக்கலை பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் வாய்த்தரக்கம் ஏற்பட்டது.

## முஸ்லிம் காங்கிரஸ் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி திருமலையில் இணைந்து ஆட்சியமைக்க ஒப்பந்தம்

(ஜிப்ரான்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் இணைந்து ஆட்சியமைப்பதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இதன் அடிப்படையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) குச்சவெளி பிரதேச சபை மற்றும் மூதூர் பிரதேச சபை உறுப்பினர்களுடனான சந்திப்பும் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.



அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் இணைந்து இரண்டு வருடங்கள் ஒப்பந்தம் அடிப்படையில் தவிசாராக பதவி ஏற்கவுள்ளனர்.

## வரவேற்பு



(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியொன்றில் தங்கப்பதக்கம் பெற்றிருந்த தென்கிழக்கு பல்கலைக்கழக, கலை மற்றும் கலாசார பீடத்தின் புவியியல் துறையில் மூன்றாம் ஆண்டு, விசேட தரத்தில் கல்வி பயிலும் எம்.எவ். செய்னப் என்ற மாணவிக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட சமூகத்தினால் விசேட வரவேற்பு மற்றும் கௌரவம் வழங்கிய நிகழ்வு பீடத்தின் கேட்போர் அரங்கில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் கலந்து கொண்டு குறித்த மாணவியை பாராட்டி உரையாற்றியதுடன் கௌரவத்தையும் வழங்கினார்.

கடந்த 2025.05.24 ஆம் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழக மர்ஹூம் ஏ.ஆர்.எம். மன்சூர் ஞாபகார்த்த பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற 3ஆவது திறந்த சர்வதேச கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொண்டு சிறப்பான வெற்றியைப் பெற்றிருந்தார்.

அவர் மூத்தோர் கட்டா பிரிவில் முதல் இடத்தையும், மூத்தோர் குமிதே பிரிவில் இரண்டாம் இடத்தையும் பெற்று தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களைப் பெற்றிருந்தார்.

நிகழ்வின்போது பீடத்தில் உள்ள திணைக்களங்களின் தலைவர்கள் சிரேஷ்ட கனிஷ்ட விரிவுரையாளர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் மாணவர்கள் என பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

செய்னப்பின் இந்த சாதனை, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலும் ஊக்கமும் உந்தலும் அளிக்கும் வகையில் அமைந்திருந்தது.

# அதிபர், ஆசிரியர் தாக்கப்பட்டமை கண்டனத்துக்குரியது; பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்

## திருக்கோவில் பிரதேச சபை வருங்காலத் தலைவர் தெரிவிப்பு

(சகா தேவராஜா)

ஆலையடிவேம்பு இராமகிருஷ்ணா தேசிய பாடசாலைக்கு அருகில் அதிபரும் ஆசிரியரும் தாக்கப்பட்டமை சம்பந்தமாக திருக்கோவில் பிரதேச சபையின் எதிர்கால தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இது போன்ற தாக்குதல் முயற்சி ஆனது எதிர்வரும் காலங்களில் மாணவர்களின் கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இது எதிர் வருகின்ற உயர்தர சாதாரண தரத்தில் இருக்கின்ற மாணவர்களின் மனநிலையை பாதிக்கக்கூடும்.

இது சம்பந்தமாக எனது கண்டனத்தை தெரிவிப்பதோடு இந்த தாக்குதலுக்கு உடனடியாக பொலீஸ் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை வழங்கவேண்டும். இல்லாவிடில் எதிர்வரும் காலங்களில் வேறு சிலராலும் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்ள கூடும் என்பதையும் இங்கு கூறலாம்.

ஆகவே இதை தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக பொலீஸ் திணைக்களம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிடில் இந்த தாக்குதல் சம்பந்தமாக உள்நாட்டு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு நான் ஒரு கடிதத்தை அனுப்பி அவர்களது கவனத்திற்கு கொண்டு வர உள்ளேன்.

பொலீஸ் திணைக்களம் உரிய முறையில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் . - என்றார்.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(அபு அலா, மட்டு. துஷாரா)

மட்டக்களப்பு - நொச்சிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் தவராசா கிருஷான் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 20 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எம்.பசீல் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

# நுவரெலியா – பதுளை பிரதான வீதியில் போக்குவரத்து பாதிப்பு

(கிஷாந்தன், கேதீஸ்)

நுவரெலியா பகுதியில் பெய்த கனமழையுடன் கூடிய பலத்த காற்று காரணமாக பெரியளவிலான சைப்ரஸ் மரங்கள் முறிந்து விழுந்ததால், நேற்று அதிகாலை நுவரெலியா–பதுளை பிரதான வீதியின் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், முறிந்து விழுந்த மரங்களை பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து வெட்டி அகற்றிய பின்னர் போக்குவரத்து ஒரு வழிப்பாதையாக மட்டுப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் பிரதான வீதிகள் மற்றும் சிறிய வீதிகளில் வாகனம் செலுத்தும் போது எச்சரிக்கையுடன் வாகனங்களை ஓட்டுமாறு பொலிஸார் சாரதிகளுக்கு வலியுறுத்துகின்றனர்.

# புத்தளம் மாவட்டத்தில் மு.கா. ஆதரவு யாருக்கு?

(சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில், உள்ளூராட்சித் தேர்தலில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புத்தளம் மாநகர சபை, புத்தளம் பிரதேச சபை, வண்ணாத்திவில்லு பிரதேச சபை, கற்பிட்டி பிரதேச சபை ஆகியவற்றில் மரச்சின்னத்தில் ஆசனங்களை வெற்றி பெற்றுள்ளதோடு, நாத்தாண்டிய பிரதேச சபையில் ஐக்கிய தேசியக் கூட்டமைப்பின் தராசு சின்னத்திலும் வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில் மேற்படி உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைவது தொடர்பான கலந்துரையாடல் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



இக் கலந்துரையாடலில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான எஸ்.எச்.எம்.நியாஸ், ரணீஸ் பதுறுதீன் (புத்தளம் மாநகர சபை உறுப்பினர்), எம்.எச்.எம்.ஹில்மி, கே.எல்.எம்.ரிழ்வான், ஏ.எஸ்.எம்.ரிழ்வான் மற்றும் எம்.றஸ்மி ஆகியோருடன் ஏ.ஆர்.எம் முஸம்மில்., சுவிஸ் பைசல் என முக்கியஸ்தர்கள் பங்கு பற்றி தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.




# கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் முயற்சியில் ஈடுபடும் அங்கவீனமுற்றவர்க்கான செயலமர்வு



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தொழில் முயற்சியில் ஈடுபடும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான உற்பத்திப் பொருள் தொடர்பான செயலமர்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி நிலையத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்றது.



இதன் வளவாளராக மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சஜீபன் கலந்து கொண்டார்.

குறித்த செயலமர்வில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். 113





# பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் சகாதேவன் தற்காலிகமாக பதவி நீக்கம்

(சுபேசன்)

பனை அபிவிருத்திச் சபையினுடைய தலைவராக இருந்த வி.சகாதேவன் செவ்வாய்க்கிழமை தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என பெருந்தோட்ட அமைச்சர் சமந்த வித்யாரத்னவினால் எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

22-10-2024 அன்று புதிய அரசாங்கத்தால் பனை அபிவிருத்திச்சபையின் தலைவராக நியமிக்கப்பட்ட வி.சகாதேவன் மீதான முறைப்பாடுகள் மற்றும் மனுக்களை பாரபட்சமின்றி விசாரணை செய்யும் முகமாக தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சம்மாந்துறை பிரதேச செயலக ஒன்று கூடலும், கௌரவிப்பும்!

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எம்.எச்.முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் விமர்சையாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஓய்வு பெற்று சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களை கௌரவித்து நினைவு சின்னங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த(சா - த),(உ-த) பரீட்சைகளில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளும் கௌரவிக்கப்படனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அத்தோடு கௌரவ அதிதியாக மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஏ.எல் மஹ்ரூப்,சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஸீக்,அம்பாறை மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி அனீஸ்,சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர்,கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா,நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமில்,சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹுசைன்,மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே ரினோஸா, அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.பி சலீம்,கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம் நளீர், உட்பட திணைக்களங்களின் தலைவர்கள் காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

உத்தியோகத்தர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேரப்பட்டதுடன்,சிறப்பாகசெயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மெச்சுரை பத்திரங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் ஓய்வுபெற்ற முன்னாள் சிரேஸ்ட நிர்வாக அதிகாரிகளான ஏ.மன்சூர்,எம்.எம் நஸீர்,திருமதி ஆர்.யூ அப்துல் ஜலீல் மற்றும் முன்னாள் அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளர் ஏ.எல் ஆதம்பாவா ஆகியோர் பிரதேச செயலக நலன்புரி அமைப்பால் கௌரவிக்கப்பட்டார்கள்.












# வவுனியா மாநகர சபை உட்படச் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்க சாதகநிலை

## நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் கருத்து

வவுனியா மாநகரசபை உட்பட வன்னியின் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கான சாதக நிலமை உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையானது பல்வேறு பிரச்சினைக்குட்பட்டதாக இருக்கிறது. நாம் ஏனைய கட்சிகளுடன், சுயேச்சை உறுப்பினர்களுடனும் பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். தனிப்பட்ட ரீதியாகவும் உறுப்பினர்களுடன் பேசியுள்ளோம்.

வவுனியாவில் சிங்கள பிரதேசசபை, வவுனியா மாநகரசபை, தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் மன்னாரில் முசலி, நானாட்டான் ஆகிய சபைகளில் நாம் ஆட்சியமைப்பதற்கான சாதகமான நிலைமைகள் காணப்படுகின்றன.

எமது கொள்கைகளை ஏற்று செயற்படுபவர்களிடம் திறந்தமனதுடன் அழைப்பு விடுக்கின்றோம்.



எமது கொள்கைகள், சிந்தனைகள் கட்சியின் விழுமியங்களுக்குஏற்றவகையில் ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் நிச்சயமாக அவர்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்க நாங்கள் காத்திருக்கின்றோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது உள்ளூராட்சி மன்றங்களூடாக பல்வேறுபட்ட செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கின்றது.

எமது வெற்றிக்கு ஊடகவியலாளர்களும் உதவியுள்ளனர். அதற்கு எமது நன்றிகளை கூறிக்கொள்கின்றோம். நியாயமான ஊடகவியலாளர்கள் இங்கு உள்ளனர். அவர்களது சேவைக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். ஆனால் ஒரு சில ஊடகவியலாளர்கள் இலாப நோக்குடன் மக்களை குழப்பும் விதமான பல்வேறு செய்திகளை பரப்புகின்றனர். அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கியே நாம் நாடாளுமன்றில் குரல் எழுப்பிவருகின்றோம். இனமத மொழி பேதத்திற்கு எமது அரசில் இடமில்லை. வவுனியாவில் மூன்று இன மக்களும் இருக்கின்றனர். அவர்களிடம் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. அவை தொடர்பானதீர்வைப் பெறுவதற்கு நாடாளுமன்றுக்கு அதனை தெரியப்படுத்துகின்றோம். அவற்றையும் ஊடகங்களில் பிரசுரித்து உங்கள் நடுநிலை தன்மையை பேணுமாறு அன்பாக கோரிக்கை விடுக்கின்றேன். - என்றார்.

100

# கொழும்பு மாநகர சபையில் ஆளும்தரப்புக்கு ஆதரவில்லை

## பொது ஜன பெரமுன திட்டவட்டம்

கொழும்புமாநகரசபையில்தனித்துபெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியாத நெருக்கடியான நிலையில் தேசிய மக்கள் சக்தி உள்ளது. ஆளுங்கட்சி கொழும்பு மாநகர சபையை கைப்பற்றுவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க போவதில்லை. பிரதான எதிர்க்கட்சி முறையான கொள்கை திட்டத்தை முன்வைத்தால் அவர்களுக்கு ஆதரவு வழங்குவது குறித்து பரிசீலனை செய்வோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது இதனைத் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை அரசியல் வரலாற்றில் ஆட்சிக்கு வந்து 07 மாத காலத்துக்குள் 23 இலட்ச வாக்குகளை இழந்த ஒரே ஆளும்தரப்புமாக தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்பும் பெயர் பெற்றுள்ளது.நாடாளுமன்றத்தில் 159 பெரும்பான்மையை தக்கவைத்துக் கொண்டுள்ள ஆளும்தரப்பும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அரசியலுக்கு புதியவர்கள் அதனால் தான் அவர்களால் வெற்றிப்பெறமுடியவில்லை என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். ஆளும் தரப்பின் 159 உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் புதியவர்கள். பலரின் பெயர் கூட மக்களுக்கு தற்போது நினைவில் இருக்காது.அவ்வாறாயின் இந்த புதியவர்கள் எவ்வாறு பொதுத் தேர்தலில் வெற்றிப் பெற்றார்கள்.

தேசியமக்கள்சக்திநடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பொய் மற்றும் வெறுப்பினை முன்னிலைப்படுத்தி வெற்றிப் பெற்றது. 6 மாத காலத்துக்குள் மக்கள் உண்மையையும், தாம் ஏமாற்றப்பட்டதையும் நன்கு அறிந்துக் கொண்டார்கள். அந்த எதிர்ப்பையே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெளிப்படுத்தினார்கள். ஆகவே மக்களின் அபிலாசைகளை ஆளும்தரப்பும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

கொழும்புமாநகரசபையில்தனித்துபெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியாத நெருக்கடியான நிலையில் தேசிய மக்கள் சக்தி உள்ளது. தேசிய மக்கள் சக்தி கொழும்பு மாநகர சபையை கைப்பற்றுவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க போவதில்லை. கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சி முறையான கொள்கை திட்டத்தை முன்வைத்தால் அவர்களுக்கு ஆதரவு வழங்குவது குறித்து பரிசீலனை செய்வோம் என்றார்.




# மின்சாரக் கட்டணம் அதிகரித்தால் பல தொழிற்சாலைகள் மூடப்படும்

## ஹர்ஷண நாணயக்கார எம்.பி. தெரிவிப்பு

இலங்கைமின்சாரசபைமின்கட்டணத்தைஅதிகரிப்பதற்கான யோசனையை முன்வைத்துள்ளது. மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் 'நெக்ஸ்ட்' ஆடை தொழிற்சாலையைப் போன்று இன்னும் எத்தனை தொழிற்சாலைகள் மூடப்படும்? பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதை விடுத்து உள்ளூராட்சிமன்றங்களில்பலவந்தமாகஆட்சியமைப்பதிலேயே ஆளும்தரப்பும் அவதானம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற முறைகேடுகளை மாநாட்டில்இதனைத்தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் மீண்டும் பெரும்தொரு மின் கட்டண அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று பல மாதங்களுக்கு முன்னரே நாம் தெரிவித்திருந்தோம். மின் சக்தி அமைச்சர் உட்பட முழு ஆளும்தரப்புமும் அதனை மறுத்தது. ஆனால் கடந்த வாரம் 18.3 சதவீதத்தினால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை மின்சாரசபையால் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நெக்ஸ் ஆடை தொழிற்சாலை மூடப்பட்டது. இந்நிலையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் இதேபோன்று இன்னும் எத்தனை தொழிற்சாலைகள் மூடப்படும்? விரைவில் நாடு எதிர்கொள்ளவிருக்கும் இந்த சவால்களுக்கு ஆளும்தரப்பு தரப்பிலிருந்து எந்த பதிலும் இல்லை. தற்போது சகல அமைச்சுக்களிலும் அரச சேவைகள் சீர்குலைந்துள்ளன.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் போக்குவரத்து அமைச்சு சார் ஊழியர்கள் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்காமல் உள்ளூராட்சிமன்றங்களில் எவ்வாறு பலவந்தமாக ஆட்சியமைப்பது என்பதிலேயே ஆளும்தரப்பும் அவதானம் செலுத்தி வருகிறது.

ஆளும்தரப்பும் பெரும்பான்மையைப் பெற்றுள்ள சபைகளில் ஆட்சியமைப்பதில் நாம் எந்த இடையூறுகளையும் விளைவிக்கப் போவதில்லை. அதேபோன்று எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை பெற்றுள்ள சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஆளும்தரப்பும் எமக்கு இடமளிக்க வேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அவற்றை கலைப்பதற்கு அரசுத் தலைவர் எந்த உரிமையும், அதிகாரமும் கிடையாது.

நாட்டின் அரசுத் தலைவர் யொருவர் எந்த சந்தர்ப்பத்திலும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே செயற்பட வேண்டும். ஆனால் தற்போதைய அரசுத் தலைவர் முற்று முழுதாக ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றார். யார் எதைக் கூறினாலும் ஐக்கிய மக்கள் சக்தியின் மேயருடன் கொழும்பில் நாம் ஆட்சியமைப்போம். நாம் எமது உறுப்பினர்களின் பெயர் பட்டியலை சமர்ப்பித்துவிட்டோம் என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குகருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்குமொத்தமாக119உறுப்பினர்கள் தெரிவாகி இருக்கின்றனர். அவர்களில் ஐக்கிய தேசிய கட்சிக்கு 13 உறுப்பினர்களே தெரிவாகி இருக்கின்றனர். 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி 55 உறுப்பினர்களை வெற்றிகொண்டது. அந்த 55 தற்போது இடம்பெற்ற தேர்தலில் 13 உறுப்பினர்கள் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

வெளியில் இருப்பவர்களை கொழும்புக்கு கொண்டுவந்து, கொழும்பு ஆக்கிரமிக்க முற்பட்டதால், மாநகர சபையின் ஒரு தொகுதியையாவது வெற்றிகொள்ள முடியாமல் போயிருக்கிறது. வடகொழும்பில் 17 வட்டாரங்கள் இருக்கின்றன. அந்த 17 வட்டாரங்களையும் அன்று நாங்கள் வெற்றி பெற்றோம். ஐக்கிய தேசிய கட்சிக்குள் இருக்கும் பிரச்சினை காரணமாக எமது கட்சியை சேர்ந்த பலர் வேறு கட்சிகளிலும் சுயாதீன குழுக்களிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கின்றனர். இதுகுறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றிக்காக குறிப்பாக வடகொழும்பை வெற்றிகொள்வதற்காக அன்று முன்னின்று செயற்பட்டஎனக்குகட்சிக்குள்வரமுடியாதவாறு சிவப்பு எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். ஏனெனில் கட்சியில் நாங்கள் முதுநிலை உறுப்பினர்கள். நாங்கள்கட்சிக்குள்சென்றால், அங்குள்ள சிலரின் வாய் அடைக்கப்படும், கட்சி ஒற்றுமைப்படும் கட்சிக்குள் எங்களுக்கு உரிய இடம் கிடைக்கும். இதனை விரும்பாத ஓரிரு நபர்களே எமக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.அதனால் டி.எஸ். சேனாநாயக்க உருவாக்கின இந்த கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவதாக இருந்தால் அனைவரும் மீண்டும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்.

கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கு என பெயர் பட்டியல் ஒன்றை நாங்கள் அன்று தயாரித்தபோது, அதனைவெளியில்இருந்துவந்தஇரண்டுபேர் மாற்யறியமைத்தார்கள். அதன்பெறுபேற்றை அன்று நாங்கள் கண்டோம். இந்த தேர்தலிலும் குறித்த இரண்டு பேரின் தீர்மானத்துக்கு அமைய செயற்பட்டதால் கொழும்பு மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அந்த 13 மன்றங்களின் பெறுபேற்றை கண்டுகொள்ள முடியுமாகி இருக்கிறது. அதனால் கட்சியை ஒற்றுமைப்படுத்தி நாங்கள் முன்னுக்கு செல்ல வேண்டும். என்றாலும் கட்சிக்குள் இருக்கும் இரண்டு பூதங்கள் இதனை செய்ய விடுவதில்லை.

ரணில் விக்ரமசிங்க அரசுத் தலைவர் பதவியை வகித்த பின்னர், இதன் பின்னர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என அவர் தெரிவித்திருந்தார்.இவ்வாறான நிலையில் கட்சியை ஒற்றுமைப்படுத்தி, கட்சியை மீண்டும் வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்ல அவர் முன்வந்து செயற்பட வேண்டும். ஆனால் குறித்த இரண்டு நபர்களால், அவருக்கு அதனை செய்ய முடியாமல், இன்று அவர் கட்சிக்குள் பணயக்கைதியாக இருக்கிறார் என்றார்.

## இந்தியாவுடனான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

21 நாட்களுக்குள் குறித்த விவரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இதற்கமைய விவரத்திரட்டைசமர்பிப்பதற்காகவழங்கப்பட்ட காலவகாசம்நேற்றுடன்(27)நிறைவடைந்தது.

தேர்தல்செலவினங்களைசமர்ப்பிப்பதற்கு சட்டத்தின் பிரகாரம் கால நீட்டிப்பு வழங்கப்படமாட்டாது என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம். ஆகவே குறித்த காலப்பகுதிக்குள் செலவின விபரங்களை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் உறுப்பினர்களது விபரங்களை பொலிஸ்மா அதிபரிடம் இன்றைய தினம் ஒப்படைப்போம். சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய பொலிஸார் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளின் பதவிக்காலம் 2025.06.02 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள நிலையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் குறித்தவர்த்தமானிஅறிவித்தலைபிரசுரிப்பதில் சிக்கல் நிலை காணப்படுகிறது. அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தமது உறுப்பினர் பெயர் பட்டியலை இதுவரையில் முழுமையாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடமோ அல்லது மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமோ சமர்ப்பிக்கவில்லை. அரைகுறையான நிலையில் வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிப்பது இயலாததொரு விடயமாகும்.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெண் பிரதிநிதித்துவம் மற்றும் உறுப்பினர் பட்டியல் தொடர்பான விபரங்களை 2025.05.30 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளோம். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சு பிரசுரித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 2025.06.02 ஆம் திகதியன்று 339 உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலத்தையும் தொடர்வதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைக்குமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம் வலியுறுத்துகிறோம் என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான வர்த்தக வீச்செல்லையை அதிகரித்தல் மற்றும் தரத்தை மேம்படுத்துதல் குறிக்கோளாக உள்ளது.

அதற்கமைய, முன்மொழியப்பட்ட வகையில் செயற்பாட்டுக் குழுவை நிறுவுவதற்காகசீனவாணிபஅமைச்சுமற்றும் இலங்கையின் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதேவேளை கைத்தொழில், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மக்கள் சீன வாணிப அமைச்சு ஆகியவற்றுக்கிடையிலான கைத்தொழில் வழங்கல் சங்கிலிகளின் பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்துதல் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொது அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி மற்றும்தொழில்வாய்ப்புகள்போன்றபரஸ்பர நன்மைகளை பெறும் குறிக்கோளுடன் கைத்தொழில்;, தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு, மற்றும் சீனாவின் வாணிப அமைச்சு ஆகியவற்றுக் இடையிலான கைத்தொழில் வழங்கல் சங்கிலிகளின் பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்துதல் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு இலங்கை மற்றும் மக்கள் சீனக் குடியரசு ஆகியவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, கைத்தொழில்;, தொழில்முயற்சிஅபிவிருத்திஅமைச்சு,மற்றும் சீனவாணிபஅமைச்சுஆகியவற்றுக்இடையில் உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இடுவதற்கு கைத்தொழில்;, தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.






# சோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்களுக்கும் பாதாள உலக மனிதப் படுகொலைகளுக்கும் தொடர்பா?

## சந்தேகம் கிளப்பும் முன்னாள் எம்.பி. கம்பன்பில

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களுக்கும், மனித படுகொலைகளுக்கும் நேரடி தொடர்புண்டு என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது. பாதாளக்குழுக்களின்துப்பாக்கிச்சூட்டினால் இதுவரையில் 30 இற்கும் அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர். இந்த இரத்தக்கறை அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கரங்களில் படிந்துள்ளது. சட்டவிரோத செயலில் ஈடுபட்ட அமைச்சர்பிமல்ரத்நாயக்கவைகைது செய்து, முடிந்தால் ரணில் விக்கிரமசிங்கவின் சாதனையை முறியடியுங்கள் என்று அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு பிவிதுரு ஹெலஉறுமயகட்சியின்தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில சவால் விடுத்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முறைகேடுகளை சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பரிசோதனைகள் ஏதுமின்றி 2025.01.18 ஆம் திகதி சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாகவும், அந்த கொள்கலன்களில் இருந்த பொருட்கள் என்னவென்பதை உரிய தரப்பினர் வெளிப்படுத்தவில்லை என்றும் சுங்க திணைக்கள சேவை சங்கம் குறிப்பிட்டது.

இந்த கொள்கலன்களை விடுவிப்பதற்கு தான் உத்தரவு பிறப்பித்ததாக கப்பற்றுறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார். பிமல் ரத்நாயக்க கப்பற்றுறை அமைச்சராக இருக்கலாம், ஆனால்சுங்கத்திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு கிடையாது. ஏனெனில் சுங்கத்திணைக்களம் நிதியமைச்சின் விடயதானங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்களை நிறுத்தி வைப்பதற்கு கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் நெரிசல் நிலை காணப்பட்டது. இதற்கு தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் உபகுழுவின் தலைவராக பிமல் ரத்நாயக்க செயற்பட்டார். இதற்காக சுங்கத்திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்படவில்லை. கொள்கலன்நெரிசலுக்கு தீர்வு தொடர்பான பரிந்துரைகளை மாத்திரம் அமைச்சரவைக்கு முன்வைக்க இந்த உபகுழுவுக்கு பணிக்கப்பட்டிருந்தது.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் என்னவிருந்தது என்பதை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக சுங்கத்திணைக்களத்திடம் 2025.02.28 ஆம் திகதியன்று கோரியிருந்தேன். இந்த கேள்விகளுக்கு சுங்கத் திணைக்களம் 2025.04.03 ஆம் திகதியன்று பதிலனுப்பி வைத்துள்ளது. திணைக்களத்தின் பதில்கள் பூரணமாக இருக்கவில்லை.

விடுவிக்கப்பட்ட 323 கொள்களல்களில் சிவப்பு மற்றும் செம்மஞ்சள் நிறத்தில் முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் எத்தனை என்ற கேள்விக்கு பதிலளிப்பதற்குரிய ஆவணம் தம்மிடம் இல்லை என்று சுங்கத்திணைக்களம் பதிலளித்துள்ளது. அத்துடன் கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் 2025.01.29 ஆம் திகதியன்று வெளியிட்ட ஊடக அறிக்கையை சுங்கத் திணைக்களம் இணைத்துள்ளது.

இந்த கொள்கலன்களில் என்னவிருந்தது என்பதை வெளிப்படுத்த ஆளும்தரப்பும் ஏன் இன்றும் பின்வாங்குகிறது. தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாதாயின் சுங்கத்திணைக்களம் ஏதோவொன்றை மறைக்கிறது. இந்த கொள்கலன்களில் ஆயுதம் மற்றும் ஆயுத இணைப்பு கருவிகள் இருக்கலாம் என்ற பெரும்தொரு சந்தேகம் எமக்கு காணப்படுகிறது.

கடந்த நான்கு மாத காலப்பகுதியில் சமூக கட்டமைப்பில் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களுக்கும், மனித படுகொலைகளுக்கும் நேரடி தொடர்புண்டு என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது. பாதாளக்குழுக்களின் துப்பாக்கிச்சூட்டினால் இதுவரையில் 30 இற்கும் அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர். இந்த இரத்தக்கறை அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கரங்களில் படிந்துள்ளது.

சுங்கத் திணைக்களம் கப்பற்றுறை அமைச்சின் கீழ் உள்ளடங்காது, நிதியமைச்சின் விடயதானத்துக்குள் உள்ளடங்கும் இவ்வாறான நிலையில் 323 கொள்கலன்களை விடுவிப்பதற்கான உத்தரவை தான் வழங்கியதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் அவர் சட்டவிரோத செயலில் ஈடுபட்டுள்ளார். ஆகவே அவரை உடனடியாக கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால ஆளும்தரப்புத்தின் அமைச்சரவை அமைச்சராக பதவி வகித்த கெஹெலிய ரம்புக்வெல மருந்து கொள்வனவு விவகாரத்தில் கைது செய்யப்பட்டு பல மாதங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டார். இலங்கை அரசியல் வரலாற்றில் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் கைது செய்யப்பட்டு பல மாதங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டமை அதுவே முதல்முறையாகும். இவ்விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க தலையிடவில்லை. சுயாதீன விசாரணைகளுக்கு இடமளித்து சாதனை படைத்தார். இந்த சாதனையை முடிந்தால் முறியடிக்குமாறு அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு சவால் விடுகிறேன் என்றார்.




# நியூஸி. பிரதிப் பிரதமர் சஜித்துடன் நேற்று பேச்சு

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம்மேற்கொண்டுள்ளநியூசிலாந்து பிரதிப் பிரதமரும், அயலுறவுத்துறை அமைச்சருமான வின்சென்ட் பீட்டர்ஸ் தலைமையிலான தூதுக்குழு நேற்று எதிர்க்கட்சிதலைவர்சஜித்பிரேமதாசவை சந்தித்து கலந்துரையாடியுள்ளது. கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

நியூசிலாந்து பிரதிப் பிரதமரும் அயலுறவுத்துறை அமைச்சருமான வின்சென்ட்பீட்டர்ஸ், பிரதிஅமைச்சரும், அயலுறவுத்துறை அமைச்சரின் முதுநிலை ஆலோசகருமான மைக்கேல் ஆப்பிள்டன், பிரதி பிரதமரின் பணியாளர் குழாம் பிரதானி கலாநிதி ஜான் ஜோஹன்சன், நியூசிலாந்துஅயலுறவுத்துறைமற்றும் வர்த்தக அமைச்சின் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா பிரிவுகளுக்கான முகாமையாளர் ஜோனா கெம்ப்கர்ஸ், இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஆணையரிர் மைக்கல் எட்வட் அபல்டன் மற்றும் இலங்கைக்கான நியூசிலாந்து பிரதி உயர்ஆணையரிர் கேப்ரியல்ஐசக்ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

நமதுநாடுதற்போதுஎதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான ஆதரவை பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது நியூசிலாந்து ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுத்தார். வர்த்தகம், முதலீடு, தொழிற்கல்வி, மூன்றாம்நிலை கல்வி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மையின்கீழ்ஈடுபாடுஉள்ளிட்ட பல முக்கிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதேபோல், இலங்கையை தன்னிறைவு பெற்ற பால் உற்பத்தி நாடாக மாற்றுவதற்காக 2013ஆம் ஆண்டுகைச்சாதிடப்பட்டபால்கூட்டுறவு ஒப்பந்தத்தைவிரிவாக்குவதுதொடர்பில் மறுபரிசீலனைசெய்யுமாறுஇதன்போது எதிர்க்கட்சித் தலைவர் நியூசிலாந்து ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுத்தார். நவீன தொழில்நுட்பம், விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் நிலைதகு விவசாய நடைமுறைகள் மூலம் காலப்போக்கில், பால்

காலைக்கதிர் Kalaikkathir

# உறுப்பினர்கள் விவரங்கள் அனுப்ப மே 30 நள்ளிரவே கடைசித் திகதி

உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள மற்றும் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட வேண்டியுள்ளதால்,ஒவ்வொரு கட்சியும், குழுவும் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டிய உறுப்பினர்கள் அனைவரின் பெயர்களையும் 2025.05.30 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னதாக உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவல்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்) 76ஆம் பிரிவின் கீழான கட்டளையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு இத் தீர்மானத்தை அறிவித்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களினாலும் குறித்த கட்சிக்கு அல்லது குழுவிற்கு உரியவாறு பெண் உறுப்பினர்கள் உள்ளிட்ட தெரிவு தொடர்பான விபரங்களை தேர்தல் முடிவடைந்தவுடனே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும், தேர்தல் முடிவுற்று 21 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் குறித்த தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொடர்பான ஆணைக்குழுவுக்கு இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சு 2424ஃ02 ஆம் இலக்கத்தின் கீழ் 2025.02.17 ஆம் திகதியன்று பிரசுரித்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2025.06.02 ஆம் திகதியன்று உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளின் பதவி காலம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ளது.

விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரது கட்டளையின் பிரகாரம், உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள மற்றும் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட வேண்டியுள்ளதால்,ஒவ்வொரு கட்சியும், குழுவும் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டிய உறுப்பினர்கள் அனைவரின் பெயர்களையும் 2025.05.30 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னதாக உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவல்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பணிப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2483ஃ13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஊடாக 2025.05.27 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# தொடருந்து சாரதிகள் பற்றாக்குறையால் தரமான சேவை வழங்கலில் கடும் சிரமம்

## உடன் தீர்வு தேவை என்கிறார் திணைக்கள பொது முகாமையாளர்

தொடருந்து திணைக்களத்தில் நிலவும் ஆளணி பற்றாக்குறையால் தொடருந்து சேவையை வினைத்திறனான வகையில் முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. 430 தொடருந்து சாரதிகளுக்கான கேள்வி காணப்படுகின்ற நிலையில் தற்போது 275 சாரதிகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுகின்றனர். பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காண வேண்டுமாயின் ஆளணி பற்றாக்குறைக்கு உடன் தீர்வுகாண வேண்டும் என தொடருந்து திணைக்கள பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

தொடருந்து திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திணைக்களத்தில்நிலவும்ஆளணிபற்றாக்குறைக்கு தீர்வு காணும் பொருட்டு ஆட்சேர்ப்புக்கு அனுமதி வழங்காத காரணத்தால் தொடருந்து சேவையை தடையின்றி வினைத்திறனாக முன்னெடுப்பதில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கு கடந்த மார்ச் மாதம் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. தற்போது சேவையில் ஈடுபடும் 275 சாரதிகள் பொதுவான சேவை கட்டமைப்புக்கு மாறாக நாளொன்றுக்கு அதிகளவான தொடருந்து பயண சேவையில் ஈடுபட வேண்டிய நிலை காணப்படுகிறது. ஏதேனும் சந்தர்ப்பத்தில் இவர்கள் விடுமுறையில் சென்றால் தொடருந்து சேவையை தடையின்றி முன்னெடுப்பதில் பெரும் சிக்கல் ஏற்படுகிறது.

20 தொடருந்து சாரதிகள் திங்கட்கிழமை சுகயீன விடுமுறையில் சென்றதால் தொடருந்து சேவை பெரும் நெருக்கடியை எதிர்கொண்டது. இதனால் தொடருந்து சேவைகள் பல இரத்துச் செய்யப்பட்டதுடன், தாமதமடைந்தன. இந்தப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காண வேண்டுமாயின் ஆளணி பற்றாக்குறைக்கு தீர்வு காண வேண்டும் என்பதை போக்குவரத்து அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# கல்வியியல் கல்லூரி மாணவியின் தற்கொலை குறித்து விசாரணை

பிங்கிரிய வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரியின் விஞ்ஞான பீட இரண்டாம் ஆண்டு மாணவி ஒருவர் தனது விடுதி அறையில் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வயம்ப தேசிய கல்வியற் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு தெல்தெனிய பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சஞ்சீவனி குமாரி என்ற மாணவியே கடந்த வெள்ளிக்கிழமை (23) இவ்வாறு உயிரிழந்துள்ளார். அம்மாணவி இரண்டு வருடங்களுக்கு முன்பு கண்டியின் தெல்தெனிய பகுதியில் இருந்து வயம்ப தேசிய கல்விக் கல்லூரிக்கு வருகை தந்துள்ளார்.

வெள்ளிக்கிழமை யாருக்கும் தெரியாத வகையில் விடுதி அறையில் வைத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது. கல்வியியற்கல்லூரி ஆசிரியர்களின்துன்புறுத்தலால் ஏற்பட்ட மன உளைச்சலைத் தாங்க முடியாமல் இவ்வாறு அவர் தற்கொலை செய்துகொண்டதாக அம்மாணவியின் சக கல்லூரி மாணவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் மாணவியை தாம் மீட்ட போதும் அவர் உயிருடன் இருந்ததாகவும் உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லாமையால் அவரை காப்பாற்ற முடியாமல் போனதாகவும் அம்மாணவர்கள் தெரிவித்தனர்.

கல்வியியற் கல்லூரியின் விதிமுறைகளின் படி உரிய நடவடிக்கைகளை நிறைவு செய்ததன் பின்னரே மாணவியை அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சம்பவத்தின் போது கல்வியியற் கல்லூரி வளாகத்தில் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் மூன்று வாகனங்கள் இருந்துள்ள போதும் சாரதிகள் இல்லாமையால் இறுதியில் மாணவியை முச்சக்கர வண்டியில் அழைத்துச் செல்ல நேர்ந்ததாகவும், கல்லூரியின் அலட்சிய போக்கே இதற்கு காரணம் எனவும் அம்மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில், இது போன்ற மரணங்கள் இனியும் இடம்பெறுவதை தடுக்குமாறு அதிகாரிகளை வலியுறுத்தி கடந்த சனிக்கிழமை (24) வயம்ப தேசிய கல்விக் கல்லூரிக்கு முன்பாக மாணவர்கள் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பீடத்தின் பீடாதிபதி வர வேண்டும் என கோரிக்கை விடுத்து, இரவு வரை அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். மேலும் மாணவியின் மரணம் தொடர்பில் விரிவான விசாரணைகள் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு கல்லூரிக்கு பயணம் செய்துள்ளதுடன், விசாரணை அறிக்கைக்கிடைத்தவுடன், உரிய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கையில் மெதடிஸ்த திருச்சபை காலடி பதித்து 211ஆவது ஆண்டுவிழா

(முஹம்மது ஜிப்ரான்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை இலங்கை திருநாட்டில்காலடி பதித்து 211 ஆவது ஆண்டுவிழாவை நினைவு கூருகின்ற இந்நாள்களிலே மூதூர் மெதடிஸ்த திருச்சபையானது தன்னுடைய திருப்பணி வாழ்வில் 145 ஆண்டுகளையும் ஆலயம் அமைக்கப்பட்ட 109 ஆவது ஆண்டையும் நினைவுகூர கடவுள் கிருபை செய்தார.;

இவ் நினைவு வழிபாடானது மூதூர் வாகரை சேகரத்தின் வெளிவாரி முகாமைகுரு அருட்பணி எஸ்டபிள்யு தேவகுமார் அவர்களின் ஆலோசனையுடன் மூதூர் மெதடிஸ்த திருச்சபையின் திருப்பணியாளர் சகோ பி. பிரதிப் அவர்களின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

சீடத்துவம் என்ற தலைப்பிலே இந்த ஆண்டுவிழா நடைபெற்றது. இந்த ஆண்டுவிழாவின் சிறப்பு அருளுரையாளராகஇலங்கைமெதடிஸ்ததிருச்சபையின் குருவானவர் அருட்பணி எஸ்.டபிள்யு.எஸ்.டி வினோத் சபாபதி கலந்து கொண்டதுடன் மூதூர் வாகரை சேகரத்தின் திருப்பணியாளர்கள் மற்றும் மூதூர் வாகரை சேகர திருச்சபை மக்கள் மற்றும் மூதூர் மெதடிஸ்த திருச்சபை மக்கள்இ மூதூர் கத்தோலிக்கதிருச்சபையின் பங்குத்தந்தை ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

மேலும் ஆண்டுவிழாவிற்கு வந்த திருப்பணியாளர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டதும் குறிப்பிடதக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# நிந்தவூர் மத்திய வடிகான் பொது வசதியாக இருக்கவேண்டும்

## வட்டாரப் பிரதிநிதி தெரிவிப்பு

(தில்சாத் பர்வீஸ்)

நிந்தவூர்பிரதேசத்தில்மழைக்காலங்களில் வெள்ள அபாயத்தை தடுக்கும் முக்கிய கட்டமைப்பாகக் கருதப்பட்ட நிந்தவூர் மத்திய வடிகால் இன்றளவில் தனது மூல நோக்கத்திலிருந்து திசைமாறிஇ சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கு காரணமாக மாறி விட்டது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகளும்இ வேட்பாளர்களும் இந்த வடிகானைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக கள விஜயத்தை மேற்கொண்டு ஆராய்ந்து கருத்து தெரிவித்தார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நிந்தவூர் மத்திய வட்டாரப் பிரதேச சபை உறுப்பினர் ஜுனைஸயில் ஜசூலி.

மத்திய வடிகானை உருவாக்கிய நோக்கம் ஒன்றே மழைக்காலங்களில் உருவாகும் வெள்ளநீரை பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றும்இ பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் ஒரு பொது பயன்பாட்டுகே.

ஆனால்இன்றுஅந்தவடிகான்வெள்ளநீர் செலுத்தும் பாதையாய் இல்லாமல்இ வீடுகளின் கழிவுநீரும் குளியலறை நீரும் வெளியேறும் ஒரு பயன்பாட்டு வடிகானாக மாற்றப்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுகின்றது.

இதனால்இ வெள்ளநீரின் ஓட்டம் தடைப்பட்டுஇ பிரதேசத்தில் தண்ணீர் தேங்கி நின்று சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

இதைவிட வேதனையளிக்கும் நிலை என்னவென்றால்இ ஒரு சில வீடுகளிலிருந்து சிறுவர் கவசங்கள்இ வீட்டுக்கழிவுகள் போன்றவை நேரடியாக வடிகானுக்குள் வீசப்படுகின்றன என்பது. இது சுற்றுச்சூழலை மட்டுமல்லஇ பொதுமக்களின் உடல் நலத்தையும் பெரிதும் பாதிக்கும்.



மழைக்காலங்களில் இந்த வடிகால்கள் அடைத்துஇ தண்ணீர் தேங்குவதால் பாதைகளும் வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கும் நிலை உருவாகிறது.

ஒரு சமூகத்தின் அடிப்படை வளர்ச்சி அதன் சுகாதார கட்டமைப்பிலேயே அமைய வேண்டும். ஆனால் ஒரு சில பொதுமக்கள் இந்த உண்மையை மிஞ்சிய தவறாகப் புரிந்து கொள்ளும் நிலை கவலையைத் தூண்டும் வகையில் உள்ளது.

இதைப் பற்றிப் மேலும் அவர் பேசும் போது -

'மத்திய வடிகான் மட்டும் அல்ல் ஊரின் பொது இடங்களில் குப்பைகள் வீசப்படுவதும் மாற வேண்டும் இ முதலில் மக்கள் தங்களது பழக்க வழக்கங்களை மாற்ற வேண்டும். பொது சொத்துக்களை தனிப்பயன்பாட்டிற்காக பயன்படுத்தும் பழக்கம் விலக வேண்டும் இப் பிழையான செயற்பாடுகள் ஒரு சில நபர்களாள் இடம்பெற்றுகின்றன. இதனால் இப் பிரதேசத்தில் வாழ்கின்ற அனைத்து மக்களும் பாதிக்கப்படுகின்றனர். மற்றும் சமூக பொறுப்பு என்பது ஒவ்வொருவருடனும் தொடங்க வேண்டும். - எனக் கூறினார்.

'முழுமையான மாற்றத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆனால் மக்கள் ஒத்துழைப்பும் அவசியம். நாங்கள் விரைவில் வடிகான்களை பராமரிக்கும் திட்டங்களை ஆரம்பிக்க முயற்சிக்கின்றேம். அதற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவும் நிச்சயமாகக் கொண்டுவரப்படும்.'

மத்திய வடிகான் என்பது தனிநபர்களின் வசதிக்காக அல்லஇ ஒரு ஊரின் நலனுக்காக உருவாக்கப்பட்டது. இதனை பாதுகாக்கும் பொறுப்பு அனைவருக்கும் சமமாகவே உண்டு எனத் தெரிவித்தார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.05.2025இல் வெளியிடப்பெற்றது